4 - JAN 1915
MADRAS.

உ

மாயவரந்தாலூகா மேலப்பாதி என்கிற

நாகார்ஜுன க்ஷேத்திரத்தின் மேற்புரமிருக்கும்

உப்புச்சந்தை

# காத்தவராயஸ்வாமி பேரில்

# பாடியகீர்த்தனங்கள்.

இவை

திருச்சி ஜில்லா மணப்பாறை

**நாச்சாரம்மாளால்**

பாடியது

மாயவரம்
வால்மீகி அச்சுக்கூடத்தில்
அச்சிடப்பட்டது.
1914

Copy rgit.

OQ2998:38.21193US
N14
125153

உ

# காத்தவராயஸ்வாமி கீர்த்தனங்கள்.

விநாயகர் வணக்கம். விருத்தம்.

கரியுரிபோர்த்திடும் நாதன் கருணையால்வந்துதித்த
கரிமுகக்கடவுளே உன் கழலிணைசரணமய்யா
ஒருவகையறியாமல் யான் ஓதுவேன் கவிதையென்று
பெருமையோடிப்பதிப்பை பிழையிலாதருள்செய்வாயே.

ஸரஸ்வதி துதி. விருத்தம்.

நான்முகன்தேவியானை நானுனைப்பணிந்தேனம்மா
காண்முனே எந்தன்நாவில் கருணையோடிருந்து நீயும்
நான் துதித்திடுவதெல்லம் நன்மையாய்ச்சேர்ப்பாயம்மா
தேன்வழிவதுபோல் ஸாம் தெரிந்திட அருள்செய்வாயே.

மஹாமாயி துதி. விருத்தம்.

உத்தமி தேவிதாயே உப்புச்சந்தையில் விளங்கும்
பத்ரகாளியே உந்தன் பதத்தைப்பணிந்தேனம்மா
பித்தரைப்போல் யானும்பிதற்றுமென் கவிதையென்று
நத்திஎல்லோரும் இதை நவின்றிட அருள் செய்வாயே.

காத்தவராயஸ்வாமி கீர்த்தனம்.

காத்தவராயா உன்னை கருத்தினில் கொண்டெப்போதும்
ஆத்திரத்தோடியானும ஸ்தோத்திரம் செய்திணைத்தேன்
பார்த்திடும் பேர்களெல்லம் பரிஹஸிக்காமல் நன்றாய்
கோத்தியதாய் விளங்க நெடுநாளும் கிருபை நீ செய்வாய்.

பெரியோர் வணக்கம்

கற்றுணர்ந்தறிந்ததில்லை கலைகள் யானறிந்ததில்லை
சற்றும் சீர்வாசமற்றும் ஸ்யோதமனகோயாலே
உற்றதோர் ஜனமெனக்கு ஒருவருமில்லாத தாலே
பற்றிய தேவபாதம் பலமிகப் புலம்புகின்றேன்
மற்றவாயாரு மிதைமகிழ்ந்து தான்பார்க்கும்போது
குறைகளிருந்ததானால் குறைகளும் மிகவிருந்தால்
கற்றுணர்ந்திருக்கும் நல்லனத்தவித்வான்களெல்லாம்
பெற்றதோர்குழந்தைசொல்போல் பிழைபொறுத்தருளுவீரே.

காண்போம் வாருங்கள் ஞானக்கார் எங்கள்
காத்தவாரயனை கண்கள் குளிர காண்போம்வாருங்கள்

சரணங்கள்.

எந்தப்பிணிகளுக்கும் வைத்தியன்
உப்பு சங்கையில் விளங்கிக்கொண்டிருக்கும் பிரவித்தன்
வெகு வித்தைகள் கற்றதோர் வித்வன்
மந்தபுத்தியுடைய மனிதர்க்கஸாத்தியன் (காண்)
காவேரிதீர திவானன்
எந்த கானநங்களிலும் புத்தியிலெம் பிரவேசன்
கருப்பழகி மங்கைக்கும் கேசன்
தன்னை கருத்தில் நினைத்தவர்மேல் கனத்தவிச்வாஸன் (காண்)
மங்களமாய் பேசும் வாயன்
அவன் எங்கள்மஹாமாயி எந்திடும்சேயன்
பங்கமடைந்தவர்க்கு நேயன் அவன்
எங்கெங்கும் பேர்பெற்றிருக்கும் உபாயன் (காண்)
தீரன் அதுலிதகம்பீரன் ஸ்ரீங்காரன்
காவேரி நதிக்கரை யோரன்
பாரிஜனங்கள் பரிவாரன் அதி சூரன்
எளியவர் உத்தாரன் வொய்யாரன் (காண்)
ரம்யமாய் வசனிக்குப் ஸகுணன்
எங்கள் அம்மை மகிழ்ந்து பார்க்கும் அழகியநயனன்
செம்மையுடனிருக்கும் வதனன்
இனி எம்மை காத்திடுவதர் கிஷணமீதகனன் (காண்)
அண்டினபேர் கந்கலன்
அவனண்டையில் போய்கண்டா ஸதிருணசீலன்
மண்டலேச்வரி பெற்றபாலன்
தன்னைகண்டுபணியும் ஜனபரிசீலன் (காண்)
நன்னய வார்த்தை புகல்வான்
எங்கள் அன்னை மஹாமாயி அருமைப்புதல்வன்
என்ன விசித்திரங்கள் சொல்வான்
அவன் தன்னைமித்ரோரை தாங்கிடிய செல்வான் (காண்)

பக்திசெய்திடும் ஜனபோஷகன்
தன்பக்தர்களைப்பார்த்து மகிழ்ந்திடும் வேஷகன்
உத்தமமாகும் நிர்தோஷன்
இவன் மெத்தவேமதுரமாய் வசனிக்கும்பாஷன் (காண்)

உற்றஜனங்களை பார்ப்பான்
இவன் சற்றுநிர்தயவற்று ஸன்னிதிசேர்ப்பான்
குற்றம் குறையில்லாமல் தீர்ப்பான்
அன்புற்ற தாய்தந்தையர் போலவேகார்ப்பான் (காண்)

எந்தன்குறை தீர்க்கும் நாதனை
அண்டவந்த ஜனங்கட்கு வரபிரஸாதனை
விந்தை விசித்திரவிநோதனை நல்ல
அந்தமாய் குறட்டின்மேலே நிற்கும்பாதனை (காண்)

ஆரியமால மணாளனை
திவ்யஆபரணங்களணிந்திடும் தோழனை
ஆதரவற்றோர்க்கு ஆளனை
தன் அன்பர்களுக்கு அதிப்பிரிய தோழனை (காண்)

அனைவரும் ஒருமித்து கூடி
எங்கள்அய்யன் பாதங்களை அனுதினமும்தேடி
ஆனந்தக்களிப்புடன் பாடி
நாம்ஆனந்தமாக அவனைக்கொண்டாடி (காண்)

வேறுகீர்த்தனம். இவ்வளவானே என்ற ஜாவளிமெட்டு.

பல்லவி.

ஓடி வா வா வா வா துரை ராஜனே எங்கள் நேசனே என்முன்
வா வா வா வா துரை ராஜனே எங்கள் நேசனே என்முன்

அநுபல்லவி

பாதக்குறட்டிலேறியே பக்தர்மேலன்பு கூறியே (ஓடி)
கையில் பிரம்புஜொலிக்க சத்தியுப்பளீரென்னவே (ஓடி)
ஆயாள் அருமைமகனே மாயவன்மருமகனே என்முன் (வா)
அம்பிகை தன் பாலகனே ஐம்புவோர்பரிபாலனே என்முன் (வா)
மாலையின் மணவாளனே சீலகுணமுள்ளாளே என்முன் (வா)

லவணுபன நிலையாளுட ஸுகுணமானகுமாரனே ஓடி (வா)
காத்தவராயனே நீவா கார்த்திருக்கிறேமய்யா துரை(வா)

வேறுகீர்த்தனம். ராகம் பியாகு.

பல்லவி.

ராஜாநீவா ராஜேச்வரநீவா
ராஜராஜேச்வர நீவாவாவா.

அனுபல்லவி.

ராஜாதிராஜனே ராஜகம்பீரனே
ராஜராஜேந்திரனே ராஜ ஒய்யாரனே
ராஜராஜர்புகழும் ரமணீய பாஷனே
ராஜராஜேச்வரி தனயா வா வா வா (ரா)

துரையே நீவருவாய் துருசினில் கூறுவாய்
குறைகளைதீர்ப்பாய் கூர்ந்துநீபார்ப்பாய்
நிறைந்திடசேர்ப்பாய் நீஎன்னைகார்ப்பாய்
அரைகொடியில் ஓடி வா வா வா (ரா)

அம்பிகை பெற்றெடுத்த அருமை குமாரா நீ வா
அன்புடன் வசனிக்கும் அப்பா நீவா வா
அழகியவடிவனே அண்ணனே நீவா
ஆனந்த மாகவே வீரவாவா (ரா)

ஏழைப்பங்காளனே நாளைக்கழிக்கின்றாயே
நாளைக்கு இன்றைக்கு என்றென்னை மயக்குறாயே
தாளவில்லையே சொல்ல மாளவில்லையே
இந்த வேளையில் கிருபைசெய்ய வாவாவா (ரா)

வேறுபல்லவி.

ராகம் ஆந்தபைரவி. ஆதிதாளம்.

என்மேல் கிருபை வந்ததோ
காத்தவராயா இரக்கம்உனக்கு வந்ததோ

அனுபல்லவி.

உன்மேல்துதித்தசர்க்காய் என்மேல்கொஞ்சம் இரக்காய்
தன்மேல் துதித்தாளென்று வன்மங்களையும் கொன்று(என்)

சரணம்

இத்தனை நாளறியாயோ என்சொல்லைக்காதில் வைத்துக்கேட்
டும் தெரியாயோ உத்தமனே நீ என்மேல்மெத்ததயவுடனே
சித்தம் வைத்தழைத்தாயே இத்தருணத்திலய்யா (என்)
பேதையென்றறிந்தாயோ நான்படுகின்ற வேதைஇப்போ
தெரிந்தாயோ வாதுசெய்யமிகத்தா காறுஎன்றறிந்தாயோ
சூதுசெய்திடவும் ஆகாதெனத்தெரிந்தாயோ (என்)
நேசம் இப்போ தெரிந்ததோ நான்உன்னிதியில் வாஸம்செய்
வதறிந்ததோ பேசாதிருந்தாலினிமோசம்வருமென்றெண்ணி
பாசம்நறுக்கிஎண்ணி பார்த்தழைத்தாயே (என்)

வேறுபல்லவி. ராகம் பைரவி. ஆதிதாளம்.

எல்லார்க்கும் கிருபைசெய்து எனைமாத்திரம்பாராத
தென்னகாரணம் சொல்லய்யா

அனுபல்லவி.

பொல்லாங்கென்னசெய்தேனோ அல்லால் குறைசெய்தேனோ
எல்லாப்பிழைகளையும் சொல்லாதிருப்பதேனோ (எல்)

சரணங்கள்.

என்றன்தாய் தன்னைத்தேடி வந்தேவடிபணிந்தேன்
வந்தவினை தீரென்று உந்தனையும் பிரார்த்தித்தேன்
எந்தனை நீபார்க்க சொந்தம இல்லையோ அல்லால்
உந்தனுக்கென்மேல்துவேஷம் உண்டோகாத்தவராயா (எல்)
எல்லையில் வந்தஎன்னை நல்லஹிதம் சொல்லாமல்
கல்லல்செய்திவ்விடத்தில் சொல்லாமல் மறைகின்றாய்
வல்லையாகிருபைஇன்னும் இல்லையோ ஔஷதம்தான்
சொல்லய்யா உனக்கிதுநல்ல கார்யமோகாத்தான் (எல்)
உண்டானால்என்மேல்குற்றம் உரைத்திடலாமேசற்றும்
இண்டாட்டம்செய்யலாமோ நீனையல்லவோயானும்
அண்டாமல் துலைவினை கொண்டாடவேன்காணுனை ஏண்டா
எந்தன்மேல் துவேஷம் வேண்டாம்உனக்குதோஷம். (எல்)

வேறுகீர்த்தனம். ராகம் கமாஸ். ஆதிதாளம்.

பல்லவி.

இதற்கோ உனைநம்பினேன் காத்தவராயா
இதற்கோ உனைநம்பினேன்

அநுபல்லவி.

இதற்கோஉனைநம்பினேன் துதிக்கநீகேட்டிருந்தும்
பதைக்கவிரட்டி விட்டாயே என்காத்தமுத்தே (இத)

சரணம்.

கருணையுடனேவரம் தருவேனென்றுரைத்து
தருணத்தில் தள்ளிவிட்டாயே என்காத்தமுத்தே (இத)
அய்யனே உந்தனை நான் மெய்யாகநம்பினேனே
பொய்யை உரைக்கதகுமோ காத்தவராயா (இத)
ஆதரிப்பாரெனக்கு யாருமில்லையென்றுனை
ஆதாரமென்று நிஜமாய் என்னுள்ளத்தில் (இத)

வேறுகீர்த்தனம். பரசுராகம். ஆதிதாளம்.

சின்னிகிருஷ்ணுதோடியாவே என்ற வர்ணமெட்டு.

பலலவி.

என்னண்ணா வந்துகாரய்யா (என்னை)
கண்ணால் சற்றுபாரய்யா (என்)

அநுபல்லவி.

எண்ணாத எண்ணமெல்லாம் மனதெண்ணுதே என்னசெய்
வேன் கண்ணன் மருமகனே ஏதகன் கண்ணன்மருமகனே
பண்ணுவதறியேனே இனி பண்ணுவதறியேனே (என்)

சரணம்

ஆற்றுவாரெங்கும் காணேன் எனைத்தேற்றுவாரெங்கும் கா
ணேன் போற்றிசெய்தேன்பாரய்யா உனைப்போற்றிசெய்தேன்
பாரய்யா காற்றாய்பரந்தோடியேநீகாற்றாய் பரந்தோடியே(என்
எனைக்கண்ணாலபார்த்தா (உனக்)கென்னகுறை நேருமோ
உன்னைநம்பிநின்றேனே (நா)னுன்னை நம்பிநின்றேனே
அந்தசின்னாண்ஸகோதரனே (ஓ)சின்னான் (என்)
திக்கில்லா மானிடர்க்கு (பொது)தெய்வம் துணையென்பாரே
அந்தவாக்கும் பொய்யாய்விட்டதோ (நீ)
நோக்கிடவும் கிட்டாதோ (என்)

வருவேனென்று சொன்னாயே (யிங்கு) வரவுங்காணேனுன்னை
பெருமைமையநீயெண்ணியே மெத்த அருமையாநின்றாயோதான்
(என்)

பார்த்தவர்களெல்லாரும் உனைக்காத்தவராயாவென்பார்
அவர்கார்த்திருப்பாரென்றுநீ எனைப்பார்த்திடவில்லையோ(என்

வேறுகீர்த்தனம்.

ராகம் ஓரமணீமணிஸாமினிதியாவே என்றஜாவளிமெட்டு.

பல்லவி.

வருவாய் வருவாய் துரைராஜா (நீ)
வருவாய் துரை ராஜா வருவாய்

(அனுபல்லவி)

வா துரைராஜா வா எங்கள்நேசா வாப்ரியபாஷா
வாபக்தபோஷா நீ வருவாய் வருவாய்துரைராஜா

(சரணம்)

தருணிவில்வாராய் துன்பத்தைத்தீராய்
வரிசையாய்காராய் வரன்களைத்தாராய் நீ (வரு)
ஆரியமாலா அழகியமணாளா
அன்பர்கள்தோழா அழகியதாவா நீ (வருவாய்)
அம்பிகைசேயா அன்பர்கள் நேயா
அழகியவாயா அமிதஉபாயா நீ (வருவாய்)
கீர்த்தனையேனோ நீவாராதேனோ
நித்திரைதானோ சிரத்தையாய்என்முன் நீ (வரு)
அந்தமதான இந்த லவணசங்கைதயில்
நின்றுஸொந்தம்நினைந்து நீ (வருவாய்)

வேறு கொண்டிச்சிந்து

காத்தவராயனே நீ (எங்களை) கார்த்துரக்ஷித்து பெருங்கீர்த்தி
கொள்வாய் காத்தவராயனே நீ.
பாபத்தினாலல்லவோ நாங்கள் ஆபத்துகளடைந்து
தாபம்கொண்டோம் கோபம் நீ கொள்ளலாமோ எங்களை
பாபிகளென்றுமிக த்தள்ளலாமோ (காத்த)
ஆதிரதரேவெந்தோம் உந்தனைப்பார்த்துப்பலன்தமாய்

ஸ்தோத்ரம்செய்தோம் வார்த்தைகள்மிகவுரைத்தோம்
நீயெம்மைப்பார்த்திடாமலிருந்தால் கேர்த்திபோதான் (கா)
பந்தங்களை றுப்பவனே உப்புசர்கைதயில்
விளங்கிக்கொண்டிருப்பவனே ஸௌந்தரியான்ஸுதனே
நாங்கள்கொந்திடுவேளையில் வந்திடுவாய் (காத்த)
எத்தனையோவிதமாய் நானிப்போதுத்திறேனுன்னை கத்துகிறே
ன் மெத்தவேவருந்துகிறேன் உன்செவியில் வைத்திடவில்லை கா
ன்பைத்தியமோ (கா)
பைத்தியம் பிடித்ததைப்போல் என்மனம் பதறுகிறேன் மெத்
தகதறுகிறேன் கைத்தலங்களைத்தருவாய் என்று காத்திருப்பே
ன் எதிர் பார்த்திருப்பேன் (கா)
இன்னமும் எந்தன்வாயால் உன்னை என்னமாயழைப்பேன்
நன்னயமாய் வன்னத்தில்வரமாட்டாய் நாங்கள் சொன்னதை
க்கேட்டு வரந்தரமாட்டாய் (கா)
வைதால்வருவாயோ நான் துதிசெய்தால் நீவரமாட்டாயோ
கொய்தென் அன்பங்களை பொடி பொடி செய்திட நீ சற்றே
கைதருவாய் (கா)
தஞ்சமென் றடையலேயோ(எங்களை நீ) வஞ்சகம் செய்திடலினை
த்தல் வரியோ பஞ்சை என்றறியாயோ நாங்கள் கெஞ்சினாலும்
உனக்கு தயையில்லையோ (கா)
ஏண்டாயிந்தகொடுமை (எங்களை நீ) தாண்டா ரக்ஷிப்பவன்
வெகுபெருமை வேண்டாம் இனிகடுமை எங்கள் ஆண்டவனே
உனக்குமெத்தமதிமை (கா)
பிரட்டிபேபேசுகிறாய் எங்களை மிரட்டுகிறாய் கண்ணையுருட்டுகி
றாய் வாட்டுவார்த்தைகளுரைத்தாய் (இதுவெல்லாம்) திருட்டுத்தே
த்னமோ அல்லால் முரட்டுத்தனம் (கா)
கருக்குதே என்னை கிலமனம் நீ என்முன் வரக்கூடாதோ இனி
யிருக்கட்டும்பார் பதாக்கவிட்டென்னையிருந்தாய் இனி உன்னை
உருக்கியிழுக்காவிட்டால் சரிக்கட்டுமோ (கா)
கண்ணியமுடையவனே எங்களண்ணான் தம்பியாவற்றமானவ
னே கணணன்மருமகனே சங்கவொண்ணங்கள் கிறைவேறப்

பண்ணுவேனே (கா)

வேறு கீர்த்தனம். பல்லவி. டிராமா மெட்டு.

உத்தமீலாதனே உந்தன் சித்திரை அடக்காதேடா

அனுபல்லவி.

மெத்தகுறையாகுமடா சித்தமிரங்கிக்கூறடா

சரணங்கள்.

ராஜ ராஜ ராஜேசனே ராஜேஜச்வரிபாலனே
ராஜபோகபோகியனே ராஜர் புகழும் யோக்யனே (உத்)
மானிடர்களுள்ளபகண்டு மனதில் நினைத்ததெல்லாம்
மகிழவெடுத்துரைத்தால் மழுங்கமைகள் உண்டுகொண்டாய் (உத)
அந்தருள்ள இந்த உப்பு சந்தையில் நிறுத்துக்கொண்டு
வந்தவர்க்குரைக்காவிட்டால் உந்தன்பெருமைபோமய்யா (உத)
ஏர்ததற்குறிப்பாகவே வார்த்தைகளுரைக்காவிட்டால்
பார்த்தவர்நம்மைதூஷிப்பார் கீர்த்தியும்குலையுமடா (உத்)
மனதில்நினைத்ததெல்லாம் மனிதர்க்குரைக்காவிட்டால்
கனமான அபவாதம் உனைவந்தடையுமடா (உத்)
உலகம் நகைக்குமடா உற்றுநினைந்துபாரடா
கலகம் செய்வதேதடா காத்தவராயா சொல்லடா (உத்)

காத்தவராயர் சிலசமயம் சரிபாப்பெடுத்திரவு சொலலாத தை ஸ்ரீபஹூமாயி தேவியிடம் சொல்லும் கீர்த்தனம்.

பல்லவி

தாயே உன்னுடசேயன் செய்வதை எல்லாம்
நீயே பார்த்திடம்மா

அனுபல்லவி

நியாயமோயிவன் செய் உபாயங்கள்முழுவதும்
பேயெனவெனை மதித்தான் ஓதேவி (தாயே உன்னுட)

சரணம்.

எத்தனையோ தலை சுத்திவந்தேனடி
உத்தமனிவனென்று சுத்தியும்கேளான்
மெத்தயிவன் கடினசித்த முள்ளவன்தானடி
எத்தனையென்று பொறுத்திருப்பேனடி

எத்தனைநாளாய் ஸகித்திருப்பேனடி
உத்தமியே கேளாய் அம்மா தாயே (தா)
யாரும் திக்கில்லாஸ் காரென்றிவனை யிப்போ
நேரினில் வந்துபணிக்கேன் வேரம்நினைந்து அநிச்சுர
மாயென்னையிவன் பாராமலிருந்தாண்டி வைரவாகுயே
கொஞ்சம் தாரதம்யமில்லாமல் தூரவிலக்கிறுண்டி (தாயே)
கேசவன்மருமகனெனது மனதில்மிகநேசம்கொண்டிருந்தேண்டி
வாஸுதேவன் தநயையே இவனைத்தனிச்சரஸம் மறந்தாண்டி
மோசம் செய்வாரோயிவன் பேசாமல்யானுமிந்த
தேசம்விட்டோடிடவோ என்தேவீ (தா)
கஷ்டமடைந்து வெதுகஷ்டத்துடனிவனை கிட்டிவந்தடி
கொழுதும் சிஷ்டாக்ஷனிவனாகயிருந்துகொண்டும் பட்டபாடு
தெரிந்தும்பொட்டனவே அழைத்து இஷ்டம் தராமலென்னை
எட்டிவில்லென்றுண்டி அடியம்மா (தாயே)
அப்பன்விஷயமாய் அடியார்களேதேனும் தப்புகள்செய்தது
ண்டோ அப்படிமிகவாய தப்புகளிருந்தாலும் செப்பவும்போ
காதோ தப்பிதமிடலாமோ இப்போதெந்தன்மீதினில்
உப்புச்சந்தைமித்தன்றோ அம்மணி (தாயே)

வேறு ராகம் ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

பல்லவி.

அய்யா யிப்படி சொல்லலாகுமோ
எந்தன்மனது உய்யவிறட்டி தள்ளப்போமோ

அனுபல்லவி.

மெய்யறியாமலய்யமடைந்து அப்பனே உனை யையகான்கேட்
டால் மெய்யைஎனக்குத்தெரியாமல் செய்யவினைக்தால்
அவமதித்தென்னை அய்யா

சரணம்.

உந்தன் லீலை தெரிந்திடாமல் ஐயம்மிகவடைந்து
என்னுடசிந்தையலைந்து விந்தைஎதுவென்றிந்தவேளையில்
வந்துஉன்னைப்பணிந்துநான் கேட்டால்வந்தனைஅதனை
என்மனதுஸந்தேகத்தை தீர்த்துவைக்காமல் (அய்யா)
உன்னைக்கேட்பதின்னதென்றறிந்து விவரம் நியாயமாய்என்னு

டன்சொல்லஎன்னகுறையோ மன்னர்கள்போற்றும்மன்னனே
அதைசொன்னதில் மிக சின்னத்தனமோ பன்னகவேணி
பாலனேயிதுதன்னயம்தானே என்னைவெறுத்து (அய்யா)
எண்டிசை புகழ்பெற்றதில்லையோ உப்புசங்கைதயில்
நிலைகொண்டுவிளங்கிஉற்றதில்லையோ மண்டலேச்வரிமைந்த
னே சங்கைகொண்டு யானுந்தனண்டையில்வந்து கண்டுகேட்ட
தை விண்டுரைக்காமல் கண்டித்துமெத்தநிண்டுமுண்டாக (அய்)
அய்யனேநீஎன்மேல் ஆயாசம்கொள்வாயோ காத்தமுத்தே
உன்னை வய்யவில்லைஎன்வாயால் செய்யுந்துதியிதய்யா (கா)
அய்யமெனக்குதீர்த்து ஆதரிக்கவில்லைநீயாதலாலே
உன்னை வய்யவும் நேர்ந்தது மெய்யாயுணர்ந்திடுவாயய்யா (கா)
பித்துகொண்டிவள் நம்மை மெத்தப்பேசினளென்று (கா)
உன் சித்தத்தில் மிகவும் வருத்தமடைகிறாயோ (கா)
சித்தங்கலங்கியானும் கத்தக்கேனாயல்நீ நின்றதாலே
உன்னைமெத்தவும் பேசிட சித்தம் நினைத்தேன் (கா)
ரொம்பவும்நானுன்னை வம்புபேசியதாக (கா)
நீ அன்பப்படுகிறாயோ அப்டாள் குமாரனே என் (கா)
நம்பிவந்தஎன்னை நீ இன்பமாய்ப்பார்க்காதிருந்ததாலே
நான் ரொம்பரொம்பவும்பேசி கும்பிடலாச்சுந்த இந்தவேளை
ஹீனமா நானுன்னை தானேபேசியதாக (கா)
ஏனோநினைக்கின்றாயே நானோவசலேவனுன்னை
ஹீனமாய்எனைபொல்லாமாநிடர் உரைத்ததைக்கேட்டிருந்துமை
வந்தேன் மானங்காக்காதிருந்ததால்நானுனைமிகநொந்தேன் (கா
இஷ்டதெய்வமாய் உன்னை கெட்டியாய் பிடித்தோமே
நீ கிட்டநெருங்காமல் எட்டிநின்றிடலாமோ (கா)
கஷ்டம்ஸகியாமலே மட்டற்றநிந்தைசொன்னேன் உன்மேல்
துஷ்டவார்த்தைகள்சொல்லி திட்டவில்லைநானுனை இந்தவேளை
பருத்தவார்த்தையாலுன்னை வெறுத்துப்பேசினேனென்று (கா)
நீ வருத்தமடையவேண்டாம் கருத்தையறிவிப்பேன் கேள்
இந்தவேளை
பொறுத்துமுடியாத்துன்பவருத்தமுடன்யானி ருந்ததாலே

அந்தவருத்தத்தினாலுன்னை உரைத்தேன் சிலது நிந்தை
இந்தவேளை சூதானவார்த்தைகள் என்காதினால்கேட்கவும் (கா)
இப்போ ஏதய்யா உனக்கிதுநீதியாய்த்தோன்றுதோ (கா)
ஏதுமறியா என்மேல் வாதுகள்மிகசிலர் சொன்னதாலே
அந்தவேதனையாலுன்னைஏதேதோ உரைத்திட்டேன் இந்தவேளை
அப்பனேயானுன்னை செப்பியவார்த்தைகள் (கா)
நீ தப்புகளெண்ணாதே ஒப்புக்கொள் நன்மையாய் இந்தவேளை
தெரிந்தும் தெரியாமல்யான் செய்தபிழைகளைக்கேளுமய்யா
நான் அறிந்தும் அறியாமலே அபசாரம் செய்திட்டால்
சற்றும்ஸரியில்லாத குற்றமானசொற்கள்யான் கேட்டதாலே
தாளாமலே
உன்னை டற்றியே மனம்நொந்தேன் மற்றதொன்றுமல்லஎன் (கா
வேறு. சகுனம்கேட்கும்கீர்த்தனம். ராகம்மணிரங்கு. சாபுதாளம்

பல்லவி.

வருத்தபறிந்துஎங்கள் வரதன்காத்தவராயன்
வருவானோ சொல் கௌளியே

அநுபல்லவி.

பொருத்துமுடியவில்லை வருத்தமனைத்தையும் தான்
நிறுத்திவிடுவேனென்று திருத்தமாயுரைத்தவன் (வரு)

சரணம்.

நல்லதிசையில் நின்று நல்ல சகுனமாக
பல்லிநீயுரைப்பாயடி கல்லோ அவன்மனது
இல்லையோகிருபையும்தான் எல்லையைவிட்டு அவன்
வல்லையோ மின்னமிங்கே (வரு)
மங்களமான வாயன் மங்களாங்கி தன்சேயன்
மங்கைமாலையோடு கேயன்
எங்களைநினைந்தவன் இங்குவருவானோ தான்
மங்களமான திக்கில் தங்கியிருந்துசொல்வாய் (வரு)
எப்போவருவானடி அப்பன் காத்தவராயன்
இப்போ நீயுரைப்பாய்டி தப்புகளெண்ணினானோ
உப்புச்சந்தையிலின்று இப்போதிங்குவாரானோ

செப்படி வாய்திறந்து (வரு)
எந்தனைக்காப்பேன் என்றால்
எந்தன் காத்தவராயன் வந்திடக்காணேனடி
நொந் வேளையிலிப்போ வந்திடுவானென்று
ஸந்தியாகாலத்தில் நீவந்துசொல்லடி பல்லி (வரு)

வேறுசாரணங்கள். கும்மி மெட்டு.

விக்கின விநாயகனே வேண்டுகிறேனய்யா
விக்கினங்கள் வாராமல் விலக்கிடுவீரய்யா
அக்கறையாய் காத்தமுத்து அருள்பெறவேண்டி
ஸத்குருநவநான் பணிந்து சகுனமது கேட்பேன்.

நல்லநுணமாகஎந்தன் நடுக்கந்தீர்க்க
நல்லதொரு காத்தமுத்து நாதன்வருமாகில்
நலலதிசைதன்னில்வந்து நற்சகுனமாக
நல்லபடி சான்மகிழ சொல்லும் சிறுபல்லி

காத்தவராயனெக்கனைக் காணவருமாகில்
கடினசித்தம்நீங்கி கண்டுகொள்வராகில்
கருணையுடனெம்மையவன் காத்திடுவாராகில்
கருணையுடன் வாய்திறந்து சொல்லும் சிறுபல்லி

கைதனிலே வாள்பிடித்த கையன் வருமாகில்
கையல் மஹாமாயி பெற்ற பையன் வருமாகில்
அய்யனெங்கள் லவணசந்தை மெய்யன் வருமாகில்
ஐயமில்லாமலெனக்குச்சொல்லும் சிறுபல்லி

கன்னனுக்குமருமகனும் கஞ்யன் வருமாகில்
பண்ணுகின்றபூஜைகொள்ளும் புண்யன்வருமாகில்
அண்ணனெங்கள்காத்தமுத்து அருகில்வருமாகில்
எண்ணிவந்தநல்லதிசை சொல்லும் சிறுப்பல்லி

சிலைஎங்கள்தேவிபெற்ற பாலன்வருமாகில்
மாலையவன் மருமண வாளன் வருமாகில்
கோலவழகிற்சிறந்த தோழன்வருமாகில்
காலைப்பொழுதிலிறங்கி சொல்லும் சிறுபல்லி

மங்கைகருப்பழகிசேரும் அங்கன்வருமாகில்
எங்களைப்பழம்பாயிபெற்ற தங்கம்வருமாகில்
செங்கையில்சிறப்புகொண்டு இங்குவருமாகில்
மங்களமாகசகுனம் சொல்லும் சிறுபல்லி
பாரளந்தோன்மருமகனும் தீரன்வருமாகில்
கோரிவந்தோர்மனம்பறிக்கும் சோரன்வருமாகில்
கோரவினைவேரறுக்கும் சூரன்வருமாகில்
பாரினிமேலநலஸ்தலத்தில் சொல்லு சிறுபல்லி

வேறு மெட்டு.

ராகம் ஸ்ரீராமசந்திரனே ஸ்ரீலோகபதிராமனே என்றமெட்டு.

ராஜராஜேச்வரனே ராஜேச்வரிபாலனே
ராஜஒய்யாரனே நீ வா வாவா
தீரனே அதசூரனே விநாயகனனை சந்தையில்நிற்ப
வனே எங்கள்முன்சிங்காரம்கூத்து நில் நில் நில்
ஸுந்தரி அருள்மைந்தனே (ராஜ)
எளாடிடையுமபுகழ பண்டிதம்செய்பவனே
சண்டைசெய்யாமல் மொழி சொல் சொல் சொல்
அப்பனேமிகமெய்யனே (ராஜ)
மங்களமாகயிங்கே தங்கியிருப்பவனே
எங்களைகண்ணால் நீ பார் பார்பார்
வல்லமைவாய்யயில்லையோ (ராஜ)
தாமஸமேனினிமேல் ஸ்ரீமஹாமாயிபாலா
பிரேமையுடனே கிருபை கூர் கூர் கூர்
சிவனேபரிபாலனே (ராஜ)
இஷ்ட நாயகனேநான் கஷ்டம் ஸஹிப்பதில்ல
மட்டில்லாத குறையைத் தீர் தீர்தீர்
பாரமோ வெகு நேரமோ (ராஜ)
அய்யா அடுத்தவர்க்கு மெய்யா அபயம் தரும்
கைபா நான் கேட்கும் வரம் தா தாதா
மாலைதன்மணவாளனே (ராஜ)

சொந்தமாகவேஎங்கள் சித்தாகுலங்கள் விள்ள சந்தோஷ
மாக இங்கே வா வா வா
எங்கள்மனமதுபொங்கிட (ராஜ)

வேறு மெட்டு

அன்பர்குறைதனை தீர்க்க அதிகஉபாயனே அம்பிகைபெற்ற
சேயனே காத்தவராயனே அம்பிகைபெற்றசேயனே நம்பிவந்
தோர்களை இன்பமதாகவே அன்புபாராட்டிடும் ஸம்பிரமனே
எங்களம்பிகைபெற்றசேயனே (1)
சோழநாட்டில் விளங்கி வாழ்வோனே காரய்யா ஏழைமு
கத்தை ப்பாரய்யா கலிதீரய்ய ஏழைமுகத்தைப்பாரய்யா
கேளும் குறைகளைத்தாளும் பிழைகளை நீள
எம்மையிந்தவேளையிலேமிக ஏழை முகத்தைப்பாரய்யா (2)
பந்தம்விலக்கிடுவதெந்தவிதம் சொல்லய்யா எந்தன்
முன்வந்து நில்லய்யா மொழியைவிள்ளய்யா
எந்தன் முன்வந்துநில்லய்யா அந்தமதாகவே உந்தனைத்தேடியே
வந்தோமிந்த உப்புச்சந்தையை நாடியே
எந்தன் முன்வந்து நில்லய்யா (3)
நோாய் ரக்ஷிப்பதற்கு யாருமெனக்கிலையே
பாராயிதென்ன தொல்லையே ஸஹிக்கவில்லையே
பாராயிதென்னதொல்லையே டரும்உன்னைவிடவேறு திக்கில்லை
நாரணன்நேத்ரி குமாரனே யோசித்துப் பாராயிதென்னதொல்
லையே(4)
உன்னைத்தவிர எனக்கு அன்னியர் துணையுண்டோ
வீரார் தமைசெர்வாருண்டோ ஓர்வகையுண்டோ
வீரார்தமைசெர்வாருண்டோ உன்னிதமாகவேஎன்னை ரக்ஷித்திடு
பன்னகவேணியின் சின்னக்குமாரனே வீரார்துணை (5)
பார்க்கஉமையின்றித்தால் ார்க்கநீர்வாருமே காக்கவும்தங்கள்
பாரமே
கஷ்டம்தீருமே காக்கவும் தங்கள்பாரமே
மூர்க்கமில்லமலென் முன்வந்து
நின்றுஎன்னைப்பார்க்கும்தாசனைப் பார்க்கும் கிடைக்காது கார்(6

ஏழை முறையிடுகின்றேன் காருண்ணியம் வேண்டினால்  தீனரக்ஷகனே
தாமேவேவோடிவா  தீனரக்ஷகனே நீவா
பானகமும் நல்லபாலுடனே  கொம்புத்தேனும்
பலாச்சுளை யெல்லாந்தானே தருவேன்  தீனரக்ஷகனே நீவா(7)
எங்கள் குருட்பழகி  பங்கையனலானே
சிங்காரமான தோளனே எங்களாளனே  சிங்காரமான தோளனே
பங்கமில்லாமலே எங்களைக்காத்திட  செங்கையைத்தருவாய்
மங்களமாகவே  சிங்காரமான தோளனே(8)
ஆரியர்மாலேடைய  அன்பு மிருதாயகா
பாரிலுயர்ந்தோரபகா வரதாயகா  பாபம்மீறியே
துன்பங்களோடிவிடாமலே  சேரினிலே வந்து
கோரிக்கைதருவாய்  அம்பிகை பெற்ற சேயனே(9)
திருஎன் துன்பங்களை  பாருன்கண்களால்
சேர் நல்லதிருவுள்ளில்  எங்களை இப்போதே
காருஎன்னை இனி  தாறுமாறுசெய்யாதே
வேறுஉன்னைவிட யாரும் கதியில்லை  அம்பிகைசேயனே(10)
கண்ணைப்போலவிளங்கும் ஸுந்திரனே  ஓடிவா எந்தனை
காடியே வாதேடியே வா வா  எந்தனை காடியே நீ வா
ஏழைப்பங்காளனே  எளியோர்க்கும் எளியோனே
எல்லார்க்கும் வெகுநல்லவனாம் முன்னோனே  அம்பிகைசேயனே(11
பட்டுவஸ்திரங்களுண்டு  படையலுனக்குண்டு
பழம்தேங்காய்களுனக்குண்டு  புஷ்பங்களுண்டு
பழு பாட்டுடனே நல்ல  பஞ்சாமிருதங்களும்
பக்ஷமாகவே பிச்சையுடனுண்ண  எந்தனை காடியே நீவா

பல்லவி

ஏழைமுகப்பாரய்யா  ஏந்திஎம்மை காரய்யா

அநுபல்லவி

எந்திடமைக்காரய்யா  நீ எங்கள்வினை தீரய்யா

சரணம்

யாருமற்றிலோடும்  அநாதையிப்போயானய்யா
காருமென்றபடித்த  கார்யமிதுதானய்யா(1)
கண்ணினால் நீர்ச்சுனை  காட்டில்விட்டீரோ

பெண்ணைப்பிறந்தார் தம்மை பேதம்செய்பகிறீரோ(2)
அண்ணனே உனைபடுத்தேன் புண்ணதாப மனதுடன்
புண்ணியம் உனக்குண்டு என் எண்ணம் நிறைவேற்றுவாய்(3)
காத்தவராயா நீஎன்னை காப்பதுந்தன் பாரந்தான்
கார்த்திருக்க வேரமில்லை பார்ப்பதுன் ஆதாரந்தான(4)

(மங்களம்)

மங்களம் எங்கள்மஹாமாயி பாலனுக்கு மங்களம் இந்த ஜகம
ஆளிபனுக்கு மங்களம் லவணசந்தையில் வீற்றிருப்போர்க்கு
மங்களம் காத்தவராயனுக்கு ஜயமங்களம் நித்தியசுபமங்களம் 1
ஆரியமாலை கப்பழகி மணவாளனுக்கு ஆயன்மருமகனுக்கு
அப்பனுக்கு ஆதரித்து எனைகார்த்து ஆபத்துவிலக்கிவைத்த
அருமையோடு ரக்ஷிக்கும் ஆண்டவனுக்கு ஜயமங்களம் 2
அம்பாள் குமாரனுக்கு அப்பனுக்கு மங்களம்
அருமைப்பாய் விளையாடும் அப்பனுக்குமங்களம் 3
அன்புபாராட்டிடும் என்அண்ணனுக்கு மங்களம்
அனைவரையும் காக்கும் பிரபுவானவனுக்கு ஜயமங்களம்.

முற்றிற்று.